

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2025) காரப்பாக்கத்தில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெறும் பகுதியில், ஒக்கியம் மடுவு கால்வாயில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக கரைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளதையும், நீர் தடை இன்றி செல்வதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# எல்லைப் போராட்டத் தியாகிகள் தினம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, நவ. 2 -**

**எல்லைப் போராட்டத் தியாகிகள் தினத்தையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இன்று நாம் வாழும் தமிழ்நாட்டின் பல பகுதிகளை நமக்காகப் போராடிப் பெற்றுத் தந்த குமரித் தந்தை மார்ஷல் நேசமணி, சிலம்புச் செல்வர் ம.பொ.சி., முதலிய எண்ணற்ற போராளிகளுக்கு எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளில் என் வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன்.

போராடாவிட்டால் நமக்குச் சொந்தமான நிலம் மட்டுமல்ல, வாக்குரிமையே கூட பறிபோய்விடும் என அப்போதே காட்டிச் சென்றுள்ள நம் தலைவர்கள் வழியில் தமிழ்நாட்டின் உரிமைகளைக் காப்போம்!

தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

---

### கிறித்தவர்களுக்கான அரசு பொது கல்லறைத் தோட்டங்கள்!

# இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்கள் அமைத்திட நிலம் ஒதுக்கீடு!

## உள்ளாட்சி அமைப்புகளிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைகளை வழங்கினார்!

**சென்னை, நவ. 2 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் விருதுநகர், தேனி, இராமநாதபுரம், திருவள்ளூர், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் கிறித்தவர்களுக்கான அரசு பொது கல்லறைத் தோட்டங்கள் மற்றும் விருதுநகர், தேனி, திருவள்ளூர், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் இஸ்லாமியர்களுக்கான அரசு பொது கபர்ஸ்தான்கள் அமைத்திட நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடங்களை சுற்றுச்சுவர், பெயர் பலகை மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்து முறையாக பராமரிக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்கிடும் விதமாக அதற்கான ஆணையினை நகராட்சி ஆணையர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடம் வழங்கினார்.**

கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாநகராட்சி/நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டம் / கபர்ஸ்தான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று 9.1.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நடைபெற்ற சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அதன்படி, விருதுநகர் மாவட்டம் - கோட்டைபட்டி, தேனி மாவட்டம் - அல்லிநகரம், இராமநாதபுரம் மாவட்டம் - சக்கரக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டம் - திருப்பாச்சூர், பெரம்பலூர் மாவட்டம் - எளம்பலூர், சிவகங்கை மாவட்டம் - அரசணி ஆகிய இடங்களில் கிறித்தவர்களுக்கான அரசு பொது கல்லறைத் தோட்டங்கள் அமைக்கவும், விருதுநகர் மாவட்டம் - கோட்டைபட்டி, தேனி மாவட்டம் - அல்லிநகரம், திருவள்ளூர் மாவட்டம் - திருப்பாச்சூர், பெரம்பலூர் மாவட்டம் - எளம்பலூர், சிவகங்கை மாவட்டம் - அரசணி ஆகிய இடங்களில் இஸ்லாமியர்களுக்கான அரசு பொது கபர்ஸ்தான்கள் அமைக்கவும் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுற்றுச்சுவர், பெயர் பலகை மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்து முறையாக பராமரிக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்கிடும் விதமாக அதற்கான ஆணையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் நகராட்சி ஆணையர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்வில், மேற்கண்ட மாவட்டங்களைச் சார்ந்த கிறித்தவ மற்றும் இஸ்லாமிய பிரதிநிதிகள் கலந்துக் கொண்டு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், சிறுபான்மையினர் நல திட்டங்களுக்கான சிறப்புக் குழுவின் உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் மற்றும் சுபேர்கான், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி லட்சுமிபிரியா, சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் திருமதி. மு.ஆசியா மரியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### நெடுஞ்சாலைத் துறை சார்பில்

# ரூ.1248.24 கோடியில் 10 சாலைகள் - 2 சாலை மேம்பாலங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 2 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஈரோடு, திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவள்ளூர், திருநெல்வேலி, அரியலூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 1177 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சாலைப்பணிகள் மற்றும் வேலூர் மாவட்டத்தில் 71 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள இரண்டு சாலை மேம்பாலங்கள் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.**

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலைத் துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

கட்டி முடிக்கப்பட்டுள்ள 10 சாலைப் பணிகள் மற்றும் இரு சாலை மேம்பாலங்களை திறந்து வைத்தல்

ஈரோடு மாவட்டத்தில் 272 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் (மாநில நெடுஞ்சாலை எண் 15) (கி.மீ 123153/6) 30.60 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்ட கோபி ஈரோடு சாலை;

மயிலாடுதுறை, திருவாரூர் மாவட்டங்களில் 221 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 10 மீ அகல இருவழிச்சாலையாக (மாநில நெடுஞ்சாலை 231) (கி.மீ 4/520/925) 16.425 கி.மீ நீளத்திற்கு தரம் உயர்த்தப்பட்ட மயிலாடுதுறை – திருவாரூர் சாலை;

தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 197 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 10 மீ அகல இருவழிச்சாலையாக (மாநில நெடுஞ்சாலை –66) (கி.மீ. 3/68/6) 5.0 கி.மீ நீளத்திற்கும் மற்றும் (கி.மீ 13/9கி.மீ 23/8) 9.90 கி.மீ நீளத்திற்கும் தரம் உயர்த்தப்பட்ட கும்பகோணம் மன்னார்குடி சாலை;

திருவள்ளூர் மாவட்டத்தில் 111 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 7/018/4) 11.40 கி.மீ நீளத்திற்கு இரு வழிப்பாதையிலிருந்து நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட கொரட்டூர் தின்னனூர் பெரியபாளையம் சாலை மற்றும் 82 கோடி ரூபாய் செலவில் (கி.மீ.7/016/2) 9.20 கி.மீ நீளத்திற்கு இரு வழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட திருவள்ளூர் அரக்கோணம் சாலை;

திருநெல்வேலி மாவட்டத்தில் 65 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் (கி.மீ 0/06/049) 6.049 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்ட அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை;

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரியலூர் மாவட்டத்தில் 60 கோடி ரூபாய் செலவில் (கி.மீ 6/814/8) 8.0 கி.மீ நீளத்திற்கும், 62 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 14/8 21/0) 6.20 கி.மீ நீளத்திற்கும் மற்றும் 63 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 21/027/6)6.60 கி.மீ நீளத்திற்கும் (மாநில நெடுஞ்சாலை140) இரு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட விருத்தாசலம் ஜெயங்கொண்டம் மதனத்தூர் சாலை;

மதுரை மாவட்டத்தில் 41 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பரங்குன்றம், மதுரை திருமங்கலம் சாலைப்பகுதி (மாநில நெடுஞ்சாலை நகர்பகுதி எண்.101); கி.மீ.2/550 3/750ல் வலதுபுறத்தில் உள்ள தென்கால் கண்மாய் கரைவழியாக 1.20 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்ட இருவழிச்சாலை;

வேலூர் மாவட்டத்தில் 35 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் கூடநகரம் அனங்காநல்லூர் சாலையில் கி.மீ 3/0ல் இரயில்வே கி.மீ. 160/24ல் உள்ள கடவு எண்.67க்கு மாற்றாக மேலாலத்தூர் வளத்தூர் இரயில் நிலையங்களுக்கிடையே கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்;

லட்சுமி அம்மாள்புரம் நாவிதம்பட்டி சாலையில் கி.மீ 0/2ல் இரயில்வே கி.மீ. 168/1214ல் உள்ள கடவு எண்.72க்கு மாற்றாக மேல்பட்டி வளத்தூர் இரயில் நிலையங்களுக்கிடையே 35 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்;

என மொத்தம் 1248 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 10 சாலைகள் மற்றும் இரு சாலை மேம்பாலங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் ஆர்.செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம், திட்டம்II மற்றும் சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கே.ஜி. சத்தியபிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### நெல் கொள்முதலில் சாதனைகளை பொறுத்துக்கொள்ள முடியாமல்

# ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை எடப்பாடி பழனிசாமி கூறுவதா?

## அமைச்சர் அர.சக்கரபாணி கண்டனம்!

*சென்னை, நவ.2-*

*முதலமைச்சர் அவர்களின் வேளாண் வளர்ச்சித் திட்டங்களால் நெல் கொள்முதலில் குறுவைப் பருவத்தில் முன் எப்போதுமில்லாத சாதனையாக டெல்டா மாவட்டங்களில் 6.13 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்து 60 நாட்களில் 11.78 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 1.59 இலட்சம் விவசாயிகளுக்கு 2801 கோடி ரூபாய் வழங்கப்பட்டதை பொறுத்துக் கொள்ள முடியாமல் எடப்பாடி பழனிசாமியும் - அன்புமணி ராமதாஸூம் நாள்தோறும் தவறான தகவல் சொல்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும் - என்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-*

*எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அரைத்த மாவையே அரைத்துக் கொண்டு உண்மையை மறைத்து தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.*

*ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் அந்த ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில் அந்த நடப்புக் கொள்முதல் பருவத்தில் மார்ச் 31 வரை நடைபெற்ற கொள்முதல் விவரம் மட்டுமே குறிப்பிடப்படும்.*

*சட்டமன்றத்தில் கொள்கை விளக்கக் குறிப்பு வைக்கப்பட்ட பின்பு அதாவது*

*ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து அந்த நடப்பு கொள்முதல் பருவம் முடிவடையும் நாளான 31/08 வரை கொள்முதல் நடைபெறும். அதற்கான புள்ளி விவரம் அந்தக் கொள்முதல் குறிப்பில் இடம்பெறாது.*

*இந்த சாதாரண விஷயத்தைக்கூட புரிந்து கொள்ளாமல் முதலமைச்சர் பொய் சொல்கிறார் என்று எதிர்கட்சித் தலைவராக இருப்பவர் தனக்கு யாரோ ஒருவரால் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரத்தைக்கூட சரிபார்க்காமல் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேசி வருகிறார்.*

**இதுவரை 1.96 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல்!**

*2021 - 2022 ஆம் ஆண்டு (07.05.2021 முதல் 30.09.2021 வரை) 1438900 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 575306 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை ரூபாய் 2,799.05 கோடி.*

*2021 - 2022 ஆம் ஆண்டு 3,182 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 43,27,616 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 8,27,249 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை*

*ரூபாய் 8,851.15 கோடி.*

*2022 - 2023 ஆம் ஆண்டு 4019 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 44,22,328 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 5,22,015 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை ரூபாய் 9,496.80 கோடி.*

*2023 - 2024 ஆம் ஆண்டு 3209 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 34,95,990 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 3,93,887 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை ரூபாய் 8,026.04 கோடி.*

*2024 - 2025 ஆம் ஆண்டு 3,774 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 4799185 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 5,14,470 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை ரூபாய் 1,1697.55 கோடி.*

*2025 - 2026 ஆம் ஆண்டு (01.09.2025 முதல் 30.10.2025 வரை) 1892 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 159084 விவசாயிகளிடமிருந்து 11,77,708 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை ரூபாய் 2,840.25 கோடி. ஆக மொத்தம் கழக ஆட்சிக் காலத்தில் 1.96 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.*



*மேற்கண்ட புள்ளிவிவரத்தையும் அவர் கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகளையும் நன்றாகப் பார்த்து இனிமேலாவது இதுபோன்று உண்மைக்குப் புறம்பாக சொல்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.*

*இதேபோன்று மற்றொரு தவறான தகவலை ஏற்கனவே சொல்லி இருக்கிறார்.*

*அதாவது செறிவூட்டப்பட்ட அரிசி தொடர்பாக ஒன்றிய அரசு ஆகஸ்ட் 18 அன்று அனுமதி வழங்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருந்தார். அதேபோன்று அவருடன் உணவு அமைச்சராக இருந்தவரும் அதே பல்லவியைப் பாடினார். டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்களும் அதையே சொன்னார். ஆனால் நேற்று (30.10.2025) நான் ஒன்றிய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத்திட்டம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி அவர்களை நேரில் சந்தித்து 2025 - 26 ஆம் ஆண்டிற்கான செறிவூட்டப்பட்ட அரிசிக்கான சோதனைத் தரச் சான்றினை விரைந்து வழங்கிட வேண்டுகோள் வைத்துள்ளேன்.*

**அன்புமணி ராமதாசின் அப்பட்டமான பொய்!**

*டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் வடமாவட்டங்களில் நெல் கொள்முதல் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக எதையும் அறிந்துகொள்ளாமலேயே அறிக்கை விட்டுள்ளார். மேலும், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 33 நாட்களாக நெல் கொள்முதல் நடைபெறவில்லை என்று தெரிவித்திருப்பதும் அப்பட்டமான பொய்.*

*கடந்த 33 நாட்களில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 20,017 மெட்ரிக் டன் நெல்லும் திருவள்ளூர் மாவட்டத்தில் 34,314 மெட்ரிக் டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.*

*2025 - 2026 இல் நாளது தேதிவரை திருவண்ணாமலை மாவட்டத்தில் 20,852 மெட்ரிக் டன்னும் வேலூரில் 1,017 மெட்ரிக் டன்னும் விழுப்பு ரத்தில் 503 மெட்ரிக் டன்னும் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.*

*நடப்புக் கொள்முதல் பருவம் 2025-2026 இல் 30.10.2025 வரை 1,892 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 11.78 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்ட நெல்லிற்கான தொகை ரூபாய் 2,840.25 கோடி 1,52,906 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. இதில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 76 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 52,458 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.*

**ஒவ்வொரு கொள்முதல் நிலையங்களில் 1000 மூட்டைகள் கொள்முதல்!**

*திருவள்ளூர் மாவட்டத்தில் 81 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 63,779 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே நாள் வரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் 44 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு*

*18,249 மெ.டன் நெல் கொள்முதலும் திருவள்ளூர் மாவட்டத்தில் 56 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 23,089 மெ.டன் நெல் கொள்முதலும் செய்யப்பட்டது.*

*கடந்த ஆண்டை ஒப்பிடும் போது இந்த ஆண்டு 2.5 மடங்கு அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமல்லாமல், கடந்த ஆறு நாட்களாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் நாளொன்றுக்குச் சராசரியாக 81 மெ.டன் நெல்லும் திருவள்ளூர் மாவட்டத்தில் நாளொன்றுக்குச் சராசரியாக 701 மெ.டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்து 389 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.*

*ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் தினசரி 1000 மூட்டைகள் வரையில் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், 13 மாவட்டங்களில் 127 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேவைப்படும் இடங்களில் கூடுதல் மெஷின்*

*(Point of Procurement) பயன்படுத்தி கூடுதலாக 1000 நெல் மூட்டைகளுக்கு மேல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கூடுதலாக 28 மெஷின்கள் (Point of Procurement) வழங்கப்பட்டு கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது.*

**ஈரப்பத அளவினை அதிகரிக்க வலியுறுத்தல்!**

*மேலும், விவசாயிகளின் நலன் கருதி கொள்முதல் நேரம் மாலை 6.00 மணியிலிருந்து 8.00 மணியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அனுமதி பெற்று ஞாயிற்றுக்கிழமைகளிலும் தமிழ்நாடு முழுவதும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.*

*நெல் கொள்முதல் ஈரப்பத அளவினை அதிகரிக்க (17% இருந்து 22%க்கு) ஒன்றிய அரசுக்கு 19.10.2025 அன்று முன்மொழிவு அனுப்பப்பட்டு ஒன்றிய அரசால் நிபுணர்கள் அடங்கிய மூன்று குழுக்கள் தமிழ்நாட்டிற்கு அனுப்பப்பட்டு நெல் ஈரப்பதத்தினை ஆய்வு செய்து நெல் மாதிரிகளை ஆய்வுக்கு எடுத்துச் சென்றுள்ளார்கள். நேற்றுமுன்தினம் 30.10.2025 ஒன்றிய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத்திட்டம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி அவர்களை நேரில் சந்தித்து ஈரப்பதத்தை 17% இலிருந்து 22% ஆக அதிகரித்து கொள்முதல் செய்திட விரைந்து அனுமதி வழங்கக் கோரப்பட்டது. இந்நிலையில் மோந்தா புயலின் காரணமாக சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் அலெர்ட் விடுக்கப்பட்டு, சனி, ஞாயிறு, திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய நாட்களில் மழை பெய்ததன் காரணமாக கொள்முதல் பணிகளில் இடையூறு ஏற்பட்டது. தற்போது புயல் கரையைக் கடந்து இயல்பு நிலை திரும்பிய நிலையில் கொள்முதல் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.*

**ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள்!**

*ஒரு கொள்முதல் நிலையத்தில் அதிகபட்சம் 800 மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு வந்த நிலையை மாற்றி ஒரு கொள்முதல் நிலையத்திற்கு ஒரு இயந்திரத்திற்கு ஆயிரம் மூட்டை வரை கொள்முதல் செய்யலாம் என்று ஆணை பிறப்பித்துச் சில கொள்முதல் நிலையங்களில் இரண்டு இயந்திரங்கள் வைத்து இரண்டாயிரம் மூட்டைகள் வரையிலும் ஒரு சில இடங்களில் மூன்று இயந்திரங்கள் வைத்து மூவாயிரம் மூட்டைகள் வரையிலும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கூட அறியாமல் கொச்சைப்படுத்திப் பேசிக் கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.*

*இந்த உண்மைகளை எல்லாம் புரிந்து கொள்ளாமல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் போன்றவர்களும் தேவையற்ற வகையில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தாமல் இருக்க கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*